**சிறப்பு ஒலிம்பிக்ஸ் தமிழ்நாடு – மாவட்ட தேர்தல்கள் 2024 – 2028**

– – – – – – – – – – – – – – – – – – –

**மாவட்ட தேர்தல் அலுவலர்களின் கனிவான கவனத்திற்கு!**

Kind attention Returning Officers!
06.04.2024

----------------

- **தங்கள் மாவட்டத்தில் சிறப்பு ஒலிம்பிக்ஸ் தேர்தல் நடத்தித்தர முன் வந்தமைக்கு நன்றிகள்.**
- **தங்கள் மாவட்ட தேர்தல்களில் வாக்கு அளிக்க தங்கள் மாவட்ட சிறப்புப்பள்ளிகளுக்க உரிமை உண்டு.**

**அரசு அங்கீகாரம் பெற்ற, அல்லது சட்டரீதியாகப் பதிவு செய்துள்ள ஒவ்வொரு சிறப்புப்பள்ளிக்கும் இரண்டு ஓட்டுகள் உண்டு. இந்த இரண்டு வாக்காளர்கள் யார் என்பதை பள்ளி நிர்வாகம் முடிவு செய்து, தமது டிரஸ்டு/பள்ளி முத்திரையிட்டு** (Seal) **எழுத்து பூர்வ வேண்டுகோளை தேர்தல் அலுவலரான தங்களுக்கு 15.04.2024 திங்கள் மாலை 4 மணி வரை நேரிலோ, பதிவு அஞ்சலிலோ, மின் அஞ்சலிலே அனுப்பி விட வேண்டும். இப்பள்ளிகளின் எழுத்துபூர்வ வேண்டுகோளை தாங்கள் சரி பார்த்து, வாக்காளர் பட்டியலை இறுதி செய்து 15.04.2024 அன்று மாலை 5 மணிக்கு அறிவித்துவிட வேண்டும். அப்பட்டிலை** Returning Officer’s Whatsapp **குழுவில் வெளியிட வேண்டும். அதன் பிரதியை மாநில தேர்தல் அதிகாரி வழக்கறிஞர் திரு.சத்தீஷ்குமார் அவர்கள் எண்ணிற்கு (9884144181) அனுப்பி வைக்க வேண்டும்.**

- **மாவட்டத்திலுள்ள சமகரசிக்ஷா சிறப்புக் குழந்தைகளை பிரதிநிதித்துவம் படுத்தும் வகையில் (முன்னர்** SSA **என்று அறியபட்டது). ஒரு ரெவன்யூ மாவட்டத்திற்கு இரண்டு பேர்**

(ஒரு சிறப்பாசிரியர் – ID, ஒரு சிறப்பு தந்தை/தாய்) என்ற அளவில் இரண்டு பேருக்கு வாக்குரிமை கோரி மாவட்ட தேர்தல் அலுவலரை, நேரிலோ அல்லது மின் அஞ்சல் அல்லது தபால் வழியோ அணுக வேண்டும். இந்த வேண்டுகோள் DEO/AEO வழியாக வர வேண்டும்.

- மாவட்டத்தில் சிறப்புக்குழந்தை (ID)-யின் பெற்றோர்கள், குறைந்தபட்சம் 9 பேர், குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் பெற்றோர் சங்கமாக (ID குழந்தைகட்காக மட்டும்) பதிவுபெற்றோ, அல்லது பதிவு பெறாமல் செயல்பட்டு வந்திருந்தால் அச்சங்கத்தின் எழுத்து பூர்வ வேண்டுகோளை ஏற்று இருவருக்கு வாக்குரிமை அளித்து வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும்.
- SOB என்பது அறிவுசார் குறைபாட்டிற்கு மட்டுமே (only for the Intellectually Disabled) எனவே, பிற மாற்றுத்திறனாளிகள் நமது அன்புக்கு உரிமையானவர்கள், ஆனால் அத்தகு அமைப்புகட்கு வாக்குரிமை இல்லை.
- மாவட்ட வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அதிகாரி இறுதி செய்வார்.

அனைத்து சிறப்புப்பள்ளிகளும், சிறப்புப்பெற்றோர்களும் வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் தமது மாவட்ட தேர்தல் அலுவலருக்கு உதவி செய்ய வேண்டுகிறோம்.

Dr. M. RAVICHANDRAN)
SOB TN ஒருங்கிணைப்பு அலுவலர்
For SOB TN Incharge & State Returning Officer